# பெருநாளின் ஒழுக்கங்கள், சட்டங்கள் குறித்த 55 பயனுள்ள குறிப்புகள்.

## (٥٥ فائدة في آداب العيد وأحكامه)


محمد صالح المُنجِّد -حفظه الله ورعاه-

ترجمه :

محمد رَزِين محمد أكْبر

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية

والدبلوم العالي في التوجيه والإرشاد في الجامعة الإسلامية بالمدينة المنورة)

தமிழில்: றஸீன் அக்பர் (மதனி)

விரிவுரையாளர்: முஸ்லிம் பெண்கள் அரபுக் கல்லூரி, கல்-எளிய



*2026 (ஹி.1447)*

بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தானது. அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக:

இவை '**பெருநாள் தின ஒழுக்கங்கள் மற்றும் சட்டங்கள்**' குறித்து தொகுக்கப்பட்ட பயனுள்ள குறிப்புகளும் அதன் சுருக்கமுமாகும். அல்லாஹுதஆலா இதன் மூலம் பயனளிக்க வேண்டுமென்றும், இதனைத் தயாரிப்பதிலும், பரப்புவதிலும் பங்குகொண்டு உதவிய அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்."

**முஹம்மத் ஸாலிஹ் அல்-முனஜ்ஜித்.**

## உள்ளே நுழைவதற்கு முன்...

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.*

*மேலும், அவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தினர், அன்னாரைப் பின்பற்றி நடந்த - நடக்க இருக்கின்ற அனைவரின் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக!*

***"பெருநாள் ஒழுக்கங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த 55 பயனுள்ள குறிப்புகள்"*** *எனும் இச்சிறு நூல், கண்ணியத்திற்குரிய அஷ்ஷெய்க் முஹம்மத் ஸாலிஹ் அல்-முனஜ்ஜித் (ஹபிழஹுல்லாஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட அரபு மூலத்தின் தமிழாக்கமாகும். இது அவர்களின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (http://ow.ly/wauL50ujFtu) வெளியிடப்பட்டிருந்தது.*

*அஷ்ஷெய்க் முஹம்மத் ஸாலிஹ் அல்-முனஜ்ஜித் அவர்கள், ஒரு விரிவான தலைப்பை மிகச் சில குறிப்புகளுக்குள் அடக்கி, அதன் சாராம்சம் குறையாமல் அழகாக வழங்கக்கூடியவர். அந்த வகையில், ஏற்கனவே எமது தளத்தின் வழியாக:*

1. ***"ரமழானின் இறுதிப் பத்து நாட்கள் மற்றும் லைலதுல் கத்ர் குறித்த 38 பயனுள்ள தகவல்கள்"***
2. ***"ஸகாதுல் ஃபித்ர் குறித்த 50 பயனுள்ள தகவல்கள்"***

*ஆகிய கையேடுகள் தமிழில் மொழியாக்கத்தின் தொடர்ச்சியாகவே, பெருநாளின் சட்டதிட்டங்களை விளக்கும் இக்கையேடு தற்போது மொழியாக்கம் செய்யப்படுகின்றது.*

*இஸ்லாத்தின் நிழலில் இரு பெருநாள் தினங்களையும் எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களை இத்தொகுப்பு வழங்குகின்றது. குறிப்பாக:*

- பெருநாள் தொழுகை எங்கே, எப்பொழுது நடத்தப்பட வேண்டும்?
- தொழுகைக்குச் செல்லும் போது ஆண்களும் பெண்களும் பேண வேண்டிய நடைமுறைகள் யாவை?
- பெருநாள் தொழுகையின் தக்பீர்கள் மற்றும் ஓதல்கள் எவை?
- பெருநாள் தினத்தில் தவிர்ந்து கொள்ள வேண்டிய தவறான நடைமுறைகள் எவை?
- வெள்ளிக்கிழமை தினத்தில் பெருநாள் வந்தால் பின்பற்ற வேண்டிய சட்டங்கள் என்ன?
- அண்டைவீட்டார், உற்றார் – உறவினர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்.

போன்ற பல முக்கிய விடயங்களை 55 குறிப்புகளாக ஆசிரியர் இதில் தொகுத்துள்ளார்.

மேலும், இந்நூலில் இடம்பெற்றுள்ள **33-வது** கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை என்பதை குறிப்பிட்டுக்கொள்வதுடன், வாசிப்பவர்களின் தெளிவுக்காக சில இடங்களில் மேலதிக விளக்கங்களை அடைப்புக்குறிக்குள் ( ) தந்துள்ளேன் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆண்டுக்கு ஒருமுறை வரும் எமது பெருநாட்களை அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த வழியில் அமைத்துக்கொள்ளவும், விலக்கப்பட்ட காரியங்களிலிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ளவும் எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக!

**இவ்வண்ணம்,**
உங்கள் சகோதரன்,
***றஸீன் அக்பர் (மதனி)***
*19-03-2026*
*29 ரமழான் 1447*

**1.** பெருநாள் என்பது ஓர் இஸ்லாமிய வழிபாட்டுச் சின்னமாகும். அதில் அல்லாஹ்வுக்கு அடிபணிதலின் ('உபூதிய்யத்'தின்) வெளிப்பாடுகள் தென்படுகின்றன. மேலும் அதிலே சமூக, உளவியல் மற்றும் ஒழுக்க மேம்பாட்டு ரீதியான பல உன்னதக் கருத்துக்கள் அதில் வெளிப்படுகின்றன.

**2.** *'ஈத்' (பெருநாள்) என்பது மீண்டும் மீண்டும் திரும்புதல் மற்றும் மீண்டும் நிகழ்தல் என்ற அடிப்படையில் அவ்வாறு அழைக்கப்படுகிறது. ஏனெனில், இது ஒவ்வொரு வருடமும் புதிய மகிழ்ச்சியுடன் மீண்டும் வருகின்றது. மேலும், இதனை அடைந்தவருக்கு (இன்னும் பலமுறை) இது மீண்டும் திரும்பக் கிடைக்கும் என்ற நல்வாய்ப்பு (நன்னம்பிக்கை) கருதியும் இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.*

*பெருநாள் என்பது, வழக்கமான முறையில் (மீண்டும் மீண்டும்) நிகழக்கூடிய ஒரு பொதுவான ஒன்று கூடலைக் குறிக்கும் பெயராகும்.*

**3.** *பெருநாட்கள் என்பவை அனைத்து சமுதாயங்களிலும் காணப்படும் அடையாளங்களாகும். அவற்றைக் கொண்டாடுவது என்பது மனிதர்களிடம் இயல்பாகவே அமைந்திருக்கும் ஓர் உணர்வோடும் இயல்போடும் தொடர்புடையது. மக்கள் அந்த நாட்களில் ஒன்று கூடி, தமது மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.*

**4.** *அல்லாஹ்வை நினைவு கூர்வதாகவும்; அவனது அருட்கொடையைக் கொண்டு மகிழ்வும் நிகழ்வாக நம்முடைய பெநாட்கள் இருக்கின்றன. அல்லாஹுத்தஆலா கூறுகிறான்:*

﴿قُلْ بِفَضْلِ اللَّهِ وَبِرَحْمَتِهِ فَبِذَٰلِكَ فَلْيَفْرَحُوا هُوَ خَيْرٌ مِمَّا يَجْمَعُونَ﴾
[يونس: ٥٨]

***"(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ்வின் அருட்கொடையினாலும், அவனது கருணையினாலுமே (இது கிடைத்துள்ளது); அதைக் கொண்டே அவர்கள் மகிழ்ச்சியடையட்டும். அவர்கள் சேகரித்து வைக்கும் (செல்வங்களை) விட இது மிகச் சிறந்ததாகும்."*** *(அல்குர்ஆன், 10:58).*

*ஆனால், பிறருடைய பெருநாட்களோ இணைவைப்பு (ஷிர்க்), இறை நிராகரிப்பு மற்றும் பாவச் செயல்கள் நிறைந்தவையாகும்.*

**5.** *எமது மார்க்கத்தில் பெருநாட்கள் என்பன இறைகட்டளைக்கு (தவ்கீபிய்யா) உட்பட்டவையாகும். முஸ்லிம்க்கு இவ்வுலகில் மூன்று பெருநாட்களைத் தவிர பெருநாட்கள் கிடையாது:*

***ஒவ்வொரு வாரமும் திரும்பத் திரும்ப வரும் பெருநாள்:*** *அது வெள்ளிக்கிழமை (ஜுமுஆ) ஆகும்.*

***ஆண்டுக்கு ஒருமுறை வரும் இரு பெருநாட்கள்:*** *அவை ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) மற்றும் ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) ஆகும்.*

عَنْ أَنَسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَدِمَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ المدينةَ، وَلَهُمْ يَوْمَانِ يَلْعَبُونَ فيهما، فَقَالَ: «ما هَذانِ اليَوْمان؟»، قَالُوا: كُنَّا نَلْعَبُ فيهما فِي الجاهليَّةِ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: «إِنَّ اللَّهَ قَدْ أَبْدَلَكُمْ بِهِمَا خَيْرًا مِنْهُمَا: يَوْمَ الْأَضْحَى، وَيَوْمَ الْفِطْرِ». (رواه أبو داود - ١١٣٤)، وصحَّحه الألبانيُّ.

*அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:* ***அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது, அங்குள்ள மக்கள் (விளையாடி) மகிழ்வதற்காக இரண்டு நாட்கள் இருந்தன. "இந்த இரண்டு நாட்களும் எத்தகையவை?" என்று நபியவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள், "நாங்கள் அறியாமைக்***

***காலத்தில் (ஜாஹிலிய்யா) இந்த இரண்டு நாட்களிலும் விளையாடி மகிழ்வோம்"*** *என்று கூறினார்கள்.*

*அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:*
***"நிச்சயமாக அல்லாஹ் அந்த இரண்டு நாட்களுக்குப் பகரமாக அவற்றை விடச் சிறந்த இரண்டு நாட்களை உங்களுக்கு வழங்கியுள்ளான்: அவை ஹஜ்ஜுப் பெருநாள் மற்றும் நோன்புப் பெருநாள் ஆகும்."***(1)

**6.** *முஸ்லிம்களின் பெருநாட்கள் என்பனஅல்லாஹ்வின் அடையாளங்களில் (ஷஆஇருல்லாஹ்) ஒன்றாகும். எனவே, அவற்றைச் சிறப்பிப்பதும், அவற்றின் நோக்கங்களைப் புரிந்துகொள்வதும், அவற்றின் உண்மையான அர்த்தங்களை அறிந்துகொள்வதும் அவசியமாகும்.*

قوله صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: «إِنَّ لِكُلِّ قَوْمٍ عِيدًا، وَهَذَا عِيدُنَا» (رواه البخاري - ٩٥٢، ومسلم - ٨٩٢).

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:*
***'நிச்சயமாக ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு பெருநாள் உண்டு; இது எங்களுடைய பெருநாள் ஆகும்.'***(2)

*இந்த ஹதீஸ் பின்வருவனவற்றை உணர்த்துகிறது:*

*இந்த இரண்டு பெருநாட்கள் (ஈதுல் ஃபித்ர் மற்றும் ஈதுல் அழ்ஹா) மட்டுமே முஸ்லிம்களுக்குரிய பிரத்தியேகமான பெருநாட்கள் ஆகும், இவைகளைத் தவிர வேறு எந்த பெருநாட்களும் கிடையாது.*

---

1) *அபூ தாவூத்: 1134, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'ஸஹீஹ்' என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

2) *புஹாரி: 952, முஸ்லிம்: 892*

*எனவே, மாற்று மதத்தவர்களான காஃபிர்கள் மற்றும் முஷ்ரிக்குகளின் பெருநாட்களுக்கே என்று உரிய பிரத்தியேகச் செயல்பாடுகளில் அவர்களுக்கு ஒப்பாக நடப்பது (அவர்களைப் பின்பற்றுவது) முஸ்லிம்களுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல."*

**7.** *முஸ்லிம்களின் பெருநாட்கள் என்பன இறைவனை நெருக்கமாக்கும் செயற்பாடாகவும், அதிலே அவனைப் பெருமைப்படுத்துவதும், அவன் வழங்கிய இந்த அருட்கொடைகளுக்காக மகிழ்ச்சியையும் - சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவதும் அடங்கியுள்ளது. மேலும், இவைகள் மகத்தான வணக்கங்களுடன் தொடர்புடையவையாகும்.*

**8.** *ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) என்பது நோன்பு மற்றும் இரவுத் தொழுகைகள் நிறைந்த மாதத்தின் முடிவில் ஒரு மகுடமாக வருகிறது. ஹஜ்ஜுப் பெருநாள் என்பது மகத்தான ஹஜ் கடமையின் கிரியைகளுக்கு மத்தியில் வருகின்றது; அதற்கு முன்னதாக மிகச் சிறந்த நாட்களில் ஒன்றான 'அரபா' தினம் அமைகின்றது.*

*இந்த இரண்டு பெருநாட்களுமே இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றோடு[3] தொடர்புடையதாக இருக்கின்றன. எனவே, அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து, அவனது வணக்கங்களை முழுமைப்படுத்தியதின் பிற்பாடே நமது பெருநாட்கள் அமைகின்றன.*

**9.** *நோன்புப் பெருநாள் தினத்தின் மிக மகத்தான செயல்களில் ஒன்று, பெருநாள் தொழுகைக்கு முன்னதாக 'ஸகாதுல் ஃபித்ர்'[4] (ஃபித்ரா) வழங்குவதாகும். இது நோன்பு நோற்றவரைத்*

---

3) *நோன்புப் பெருநாள் என்பது ரமழான் மாத நோன்போடும், ஹஜ்ஜுப் பெருநாள் என்பது "ஹஜ்" கிரியையோடும் தொடர்புபட்டதாக இருக்கின்றது.*

4) *இந்த "ஸகாதுல் ஃபித்ர்" தொடர்பாக மேலதிக விவரங்களை அஷ்ஷெய்க் முஹம்மத் ஸாலிஹ் அல்முனஜ்ஜித் (ஹபிழஹுல்லாஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட "ஸகாதுல் ஃபித்ர் குறித்த 50 பயனுள்ள தகவல்கள்" எனும் தொகுப்பில் பார்க்கலாம். [https://islamkalvi.com/?p=127287](https://islamkalvi.com/?p=127287) பின்வரும் லின்கில் சென்று அதனை தரவிரக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.*

*தூய்மைப்படுத்துவதாகவும், ஏழைகளுக்கு உணவாகவும் அமைகின்றது.*

**10.** *பொதுவாகவே பெருநாள் தினத்தன்று நோன்பு நோற்பது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது (ஹராம் ஆகும்).*

أَبِي سَعِيدٍ الخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ الله صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ «نَهَى عَنْ صِيامِ يَوْمَيْنِ: يَوْمِ الفِطْرِ وَيَوْمِ النَّحْرِ» (رواه البخاري - ١٩٩١، ومسلم - ٨٢٧ واللفظ له).

*அபூ ஸயீத் அல்-குத்ரீ (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:* ***"நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரண்டு நாட்களில் நோன்பு நோற்பதற்குத் தடை விதித்தார்கள்: அவை நோன்புப் பெருநாள் மற்றும் பலி கொடுக்கும் பெருநாள் (ஹஜ்ஜுப் பெருநாள்) ஆகும்."*** [5]

**11.** *பெருநாள் தினத்தின் சுன்னத்துக்களில் (நபிவழிகளில்) ஒன்று* ***'தக்பீர்'*** *கூறுவதாகும்.*

*ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்:*

﴿وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ﴾ [البقرة: ١٨٥]

***"...மேலும் (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமையாக்குவதற்காகவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும் (தக்பீர் கூறுவதற்காகவும்), நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் (இதை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான்)."*** *(அல்குர்ஆன், 02: 185)*

---

[5]) *புஹாரி: 1991, முஸ்லிம்: 827 - இந்த வாசகம் முஸ்லிம் நூலில் உள்ளவாறு அமைந்துள்ளது*

**12.** நோன்புப் பெருநாள் அன்று, பெருநாள் இரவின் சூரியன் மறைந்ததிலிருந்து இமாம் பெருநாள் தொழுகைக்காகப் புறப்பட்டு வரும் வரை தக்பீர் கூறுவது மார்க்கமாகும்.

**13.** ஹஜ்ஜுப் பெருநாள் அன்று தக்பீர் கூறுவது 'முத்லக்' (பொதுவானது) மற்றும் 'முகய்யத்' (குறிப்பிட்ட நேரத்திற்குட்பட்டது) என்று இரண்டு வகைப்படும்:

***முத்லக் (பொதுவான தக்பீர்):*** இது எல்லா நேரங்களிலும், எல்லா நிலைகளிலும், எல்லா இடங்களிலும் சொல்லப்பட வேண்டியதாகும். இது அய்யாமுத் தஷ்ரீக் (பெருநாளைத் தொடர்ந்து வரும் மூன்று நாட்கள்) உடைய நாளின் கடைசி நாள் முடியும் வரை நீடிக்கும்.

***முகய்யத் (தொழுகைகளுக்குப் பின் சொல்லப்படும் தக்பீர்):*** இது கடமையான தொழுகைகளுக்குப் பிறகு[6] சொல்லப்படுவதாகும். இது அரபா தினத்தின் (துல்ஹஜ் 09) ஃபஜ்ர் தொழுகையிலிருந்து தொடங்கி, அய்யாமுத் தஷ்ரீகின் மூன்றாவது நாள் (துல்ஹஜ் 13) அஸர் தொழுகை முடிவடையும் வரை நீடிக்கும்.

**14.** முன்னோர்களிடமிருந்து (ஸலஃபுகள்) அறிவிக்கப்பட்டுள்ள தக்பீர் சொல்லும் முறைகளில் சில:

முதலாவது முறை:

«الله أكبرُ، الله أكبرُ، لا إله إلا الله، والله أكبرُ، الله أكبرُ، ولله الحمدُ»

*«அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லா இலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து»*

---

6) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தினத்தில் கடமையான தொழுகைக்குப் பிறகு தக்பீர் கூறுவார்கள் என்று வரக்கூடிய செய்திகள் "பலவீனமானதாகும்" அத்துடன் உமர் (றழி), அலி (றழி), இப்னு அப்பாஸ் (றழி) அன்ஹும் போன்றோர்களது செயற்பாடுகளாக இருந்தன.

*(பொருள்: அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது).*

*வேறு சில அறிவிப்புகளில் ஆரம்பத்தில் மூன்று முறை தக்பீர் (அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்...) கூறுவதும் வந்துள்ளது.*

*மற்றுமொரு வடிவம்:*

«اللهُ أكبرُ كبيرًا، اللهُ أكبرُ كبيرًا، اللهُ أكبرُ وأجلُّ، اللهُ أكبرُ ولله الحمدُ» وزادَ بعضُهم في آخره: «اللهُ أكبرُ على ما هدانا»

*«அல்லாஹு அக்பர் கபீரா, அல்லாஹு அக்பர் கபீரா, அல்லாஹு அக்பர் வ அஜல்லு, அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து»*

*சிலர் இதன் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்த்துக் கொள்கின்றனர்:*

*«அல்லாஹு அக்பர் அலா மா ஹதானா»*

*(பொருள்: அல்லாஹ் எங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அவன் மிகப் பெரியவன்).*

**15.** *தக்பீர் கூறும்போது உயர்ந்த சத்தத்தில் கூறுவது நபிவழியாகும். ஏனெனில், இது இஸ்லாத்தின் அடையாளங்களை வெளிப்படுத்துவதாகவும், மற்றவர்களுக்கு (அதை) நினைவுபடுத்துவதாகவும் அமைகின்றது.*

*எனவே, மக்கள் பெருநாள் தினத்தில் – தமது பள்ளிவாயல்களிலும், வீடுகளிலும், வீதிகளிலும் தக்பீரைக் கூறுவது விரும்பத்தக்கதாகும். அதன்போது அவர்கள் பிரயாணத்தில் இருந்தாலோ அல்லது ஊரில் தங்கியிருந்தாலோ சரியே,*

*அல்-பிர்யாபி (றஹ்) அவர்கள் ஒரு ஸஹீஹான (ஆதாரப்பூர்வமான) சான்றுடன் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:*

*அபூ அப்துர் ரஹ்மான் அஸ்-ஸுலமீ (றஹ்) அவர்கள் கூறினார்கள்: "(ஸஹாபாக்கள்) ஈதுல் அழ்ஹாவை விடவும் ஈதுல் ஃபித்ர் அன்று தக்பீர் கூறுவதில் மிகத் தீவிரமாக (அதிகம் சத்தமிடுபவர்களாக) இருந்தார்கள்."*

**16.** *அனைவரும் ஒருமித்த குரலில், ஒரே அமைப்பில் கூட்டாக தக்பீர் சொல்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. அல்லது இரு அணிகளாகப் பிரிந்து, ஒரு அணி தக்பீர் சொல்ல மற்றோர் அணி அதற்குப் பதிலளிப்பது போன்ற முறைகளும் மார்க்கத்தில் இல்லை. இத்தகைய முறைகள் நமது ஸலஃபுகள் (முன்னோர்கள்) காட்டித் தராத புதிய (பித்அத்) நடைமுறைகளாகும்.*

*மார்க்கத்தில் வழிகாட்டப்பட்டுள்ள வழிமுறை என்னவென்றால், ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தக்பீர் கூறுவதாகும். ஒருவேளை தற்செயலாகத் திட்டமிடாமல் பலரது குரல்கள் ஒன்றுபட்டால் அதில் தவறில்லை.*

**17.** *பெருநாள் தினத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வழிகாட்டல்களில் சில: தன்னை அழகுபடுத்திக் கொள்வது, அலங்கரித்துக் கொள்வது, நறுமணம் பூசிக்கொள்வது மற்றும் புத்தாடை அணிவது ஆகியவையாகும். எனவே, ஆண்கள் தங்களிடம் உள்ள ஆடைகளில் மிக அழகானவற்றை அணிந்து கொள்வது அவசியமாகும்.*

**18.** *பெண்கள் வெளியில் செல்லும்போது தங்களது மார்க்க ரீதியான ஹிஜாபை முறையாக அணிந்து செல்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். மேலும், பெருநாள் தொழுகைக்கான திடலுக்குச் (முஸல்லா) செல்லும்போது பிறரைக் கவரும் வகையிலான அலங்கார ஆடைகளை அவர்கள் அணியக் கூடாது.*

*ஏனெனில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:*

قول النبيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: «ولْيَخْرُجْنَ تَفِلات» (رواه أبو داود - ٥٦٥)، وصحَّحه الألبانيُّ.

***"அவர்கள் சாதாரண ஆடைகளில் (அலங்காரமற்ற நிலையில்) வெளியே வரட்டும்."***[7]

*அதாவது, தபர்ருஜ் எனப்படும் பிறரைக் கவரும் ஆடைகளைத் தவிர்த்து சாதாரண ஆடைகளில் வர வேண்டும்.*

*மேலும், பெண்கள் நறுமணம் பூசிக்கொண்டு வெளியே வருவது தடுக்கப்பட்டதாகும். ஒரு ஆண் தனது குடும்பத்தினர் இத்தகைய ஒழுக்கங்களைப் பேணுவதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்புடையவன் ஆவான்.*

**19.** *பெருநாளின் ஒழுக்கங்களில் ஒன்று மக்கள் தமக்கு மத்தியில் பரிமாறிக்கொள்ளும் சிறந்த வாழ்த்துக்களாகும். அந்த வாழ்த்து வாசகங்கள் எதுவாக இருந்தாலும் சரியே. இது உயரிய நற்பண்புகளில் ஒன்றாகவும், முஸ்லிம்களுக்கு மத்தியிலான அழகான சமூக உறவுகளின் வெளிப்பாடாகவும் அமைகின்றது.*

*உதாரணமாக,*

«تقبَّل الله منَّا ومنكم»، أو: «عيد مبارك»

*"தகப்பலல்லாஹு மின்னா வமின்கும்" (அல்லாஹ் எங்களிடமிருந்தும் உங்களிடமிருந்தும் -நற்செயல்களை- ஏற்றுக்கொள்வானாக)*

*அல்லது*

*"ஈத் முபாரக்" (பெருநாள் வாழ்த்துக்கள்) போன்ற அனுமதிக்கப்பட்ட வாழ்த்து வாசகங்களைப் பயன்படுத்தலாம்.*

---

[7]) *அபூ தாவூத்: 565, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'ஸஹீஹ்' என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

وقد كان أصحابُ النبيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إذا التقوا يومَ العيدِ يقولُ بعضُهم لبعضٍ: «تقبَّل الله منَّا ومنك»(حسَّنَ إسنادَه الحافظُ ابنُ حجر في الفتح ٢/ ٤٤٦).

*"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தோழர்கள் பெருநாள் தினத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் போது:*
*'தகப்பலல்லாஹு மின்னா வமின்க' (அல்லாஹ் எங்களிடமிருந்தும் உங்களிடமிருந்தும் -நற்செயல்களை- ஏற்றுக்கொள்வானாக) என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொள்வார்கள்."*[8]

**20.** *பெருநாள் தொழுகை என்பது மார்க்கத்தின் மகத்தான அடையாளங்களில் ஒன்றாகும். இது ஆண்கள் மீது (வாஜிப்) கடமையாகும் என்பது அறிஞர்களின் கருத்துக்களில் மிகவும் பலமான கருத்தாகும்,*

*இதற்கான காரணங்கள்:*

- *அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இதனைத் தொழுமாறு கட்டளையிட்டுள்ளார்கள்.*
- *அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியும் வரை இதனைத் தொடர்ந்து தொழுது வந்தார்கள்.*
- *அவர்களுக்குப் பின் வந்த நேர்வழி பெற்ற கலீபாக்களும் (குலபாவுர் ராஷிதூன்) இதனைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார்கள்.*

**21.** *பெருநாள் தொழுகையின் நேரம்: சூரியன் உதயமானதிலிருந்து ஒரு ஈட்டியளவு உயர்ந்த நேரத்திலிருந்து, நண்பகல் (ஸவால்) வரையாகும். மேலும்,*

---

8) *இதன் அறிவிப்பாளர் தொடரை ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் 'ஃபத்ஹுல் பாரி' (2/446) நூலில் 'ஹஸன்' - தரம் மிக்கது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்*

*நோன்புப் பெருநாள் தொழுகையைச் சற்று தாமதப்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கதாகும். (ஏனெனில் மக்கள் ஃபித்ரா வழங்குவதற்கு கால அவகாசம் கிடைப்பதற்காக).*

*ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையைப் பொருத்தவரை அதனை நேரகாலத்துடன் தொழுவது விரும்பத்தக்கதாகும். (ஏனெனில் மக்கள் குர்பானி கொடுப்பதற்கு அதிக நேரம் கிடைப்பதற்காக).*

*இவை அனைத்தும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பின்பற்றிச் செய்யப்படுவதாகும்.*

**22.** *பெருநாள் தொழுகைக்காகக் குளிப்பது சுன்னத்தாகும்.*

قال سعيد بن المسيب: «سُنَّةُ الفطر ثلاث: المشي إلى المصلَّى، والأكل قبل الخروج، والاغتسال»

*ஸயீத் இப்னுல் முஸய்யிப் (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "நோன்புப் பெருநாளின் சுன்னத்துக்கள் மூன்று: தொழுகை திடலுக்கு நடந்து செல்வது, (தொழுகைக்குப்) புறப்படுவதற்கு முன் ஏதேனும் உண்பது மற்றும் குளிப்பதாகும்."*

*குளிப்பதற்கு மிகச் சிறந்த நேரம் ஃபஜ்ர் தொழுகைக்குப் பின்னராகும். ஒருவேளை யாராவது ஃபஜ்ர் தொழுகைக்கு முன்னரே குளித்துவிட்டாலும் அதுவும் போதுமானதாகும்.*

**23.** *பலரால் கைவிடப்பட்ட சுன்னத்துக்களில் ஒன்று: நோன்புப் பெருநாள் தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்னதாக ஏதேனும் உண்பதாகும்.*

عن أنس رَضِيَ اللَّهُ عَنْهُ قال: «كان رسول الله صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لا يَغْدُو يَومَ الفِطْرِ حتى يأكل تمرات، ويأكُلُهُنَّ وِتْرًا». (رواه البخاري - ٩٥٣).

*அனஸ் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:* ***"அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நோன்புப் பெருநாள் அன்று சில பேரீச்சம்பழங்களை உண்ணாமல் (தொழுகைக்காக) வெளியேற***

***மாட்டார்கள். மேலும், அவற்றை அவர்கள் ஒற்றைப்படை (3, 5, 7... என்ற எண்ணிக்கையில்) உண்பார்கள்."***[9]

**24.** *ஆனால், ஹஜ்ஜுப் பெருநாள் அன்று: தொழுகையிலிருந்து திரும்பும் வரை எதையும் உண்ணாமல் இருப்பது நபிவழியாகும். தனது குர்பானிப் பிராணியின் இறைச்சியிலிருந்து உண்பதற்காகவும், அன்றைய தினத்தின் முதல் உணவாக அதிலிருந்தே உண்பதற்காகவுமே இவ்வாறு செய்யப்படுகிறது.*

كان النبيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ «لا يَطْعَمُ يَوْمَ الأَضْحَى حَتَّى يُصَلِّيَ» (رواه الترمذي - ٥٤٢)، وصحَّحه الألبانيُّ.

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்* ***"ஹஜ்ஜுப் பெருநாள் அன்று தொழுது முடிக்கும் வரை எதையும் உண்ண மாட்டார்கள்."*** [10]

*இருப்பினும், ஒருவரிடம் குர்பானி கொடுப்பதற்குப் பிராணி இல்லையென்றால்: "நிச்சயமாக அவர் தொழுகைக்கு முன்னதாக உண்ணாமல் (தவிர்ந்து) இருக்க வேண்டும் என்பது மார்க்கச் சட்டமல்ல; மாறாக அது அவரது விருப்பத்தைப் பொறுத்தது. எனவே, தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்பே அவர் உணவு உட்கொண்டால், 'நீர் நபிவழியை மீறிவிட்டீர்' என்று நாம் அவருக்குச் சொல்லவும் மாட்டோம்."* [11]

**25.** *பெருநாள் தொழுகை திடலுக்கு (இமாமைத் தவிர மற்றவர்கள்) நேரகாலத்துடன் செல்வதும், இமாமுக்கு நெருக்கமாக அமர்வதும் (முஸ்தஹப்) விரும்பத்தக்கதாகும். இது நற்செயல்களில் முந்துவதாகும், மேலும் இதுவே ஸஹாபாக்களின் நடைமுறையுமாகும்.*

---

9) *புஹாரி: 953*

10) *திர்மிதி: 542, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'ஸஹீஹ்' என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

11) *இப்னு உஸைமீன் (றஹ்) அவர்களின் அஷ்-ஷரஹுல் மும்திஃ: 5/124*

*ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சூரியன் உதயமான பிறகு தொழுகைக்காக வெளியே வரும்போது, மக்கள் ஏற்கனவே (நேரகாலத்தோடு) சமூகமளித்து இருப்பதை அவர்கள் காண்பார்கள்.*

**26.** *ஒருவர் பெருநாள் தொழுகை திடலுக்கு செல்லும்போதே உயர்ந்த சத்தத்தில் தக்பீர் சொல்வது நபிவழியாகும்.*

جاء عن النبي صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّه «كان يَخْرُجُ يوم الفطر فيكبّر حتى يأتي المصلَّى، وحتى يقضيَ صلاتَه»(رُوي مرفوعًا وموقوفًا، وصحَّحه مرفوعًا وموقوفًا الألبانيُّ في الإرواء - ٦٥٠).

***"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) நோன்புப் பெருநாள் அன்று (தொழுகைக்காகப்) புறப்பட்டு, தொழுகைத்திடலை அடையும் வரையிலும், தொழுகை நிறைவு செய்யும் வரையிலும் தக்பீர் கூறிக்கொண்டே இருப்பார்கள்"***[12]

*மேலும், இப்னு உமர் (றழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் "ஈதுல் ஃபித்ர் மற்றும் ஈதுல் அழ்ஹா (நோன்பு, ஹஜ்ஜுப் பெருநாள்) ஆகிய இரு பெருநாட்களிலும் தொழுகை திடலுக்குச் செல்லும் போது சத்தமாகத் தக்பீர் கூறுவார்கள்; இமாம் (தொழுகைக்காக) வரும் வரை அவர் இவ்வாறு செய்வார்; பின்னர் இமாமின் தக்பீருடன் இணைந்து தக்பீர் கூறுவார்" என்பது ஆதாரபூர்வமான (ஸஹீஹான) செய்தியாகும்.*

**27.** *பெருநாள் தொழுகை திடலுக்கு நடந்து செல்வதும், செல்லும் வழியில் அமைதியுடனும் கண்ணியத்துடனும் செல்வதும் நபிவழியாகும்.*

---

[12]) *இது மர்ஃபூஃ (நபிமொழி) மற்றும் மவ்கூஃப் (ஸஹாபி மொழி) ஆகிய இரு நிலைகளிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'அல்-இர்வா' (650) நூலில் ஸஹீஹ் என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

عن ابن عُمر رَضِيَ اللَّهُ عَنْهُما قال: «كان رَسولُ الله صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَخْرُجُ إلى العيد ماشيًا، ويَرْجِعُ ماشيًا»(رواه ابن ماجه - ١٢٩٤)، وحسَّنه الألباني.

*இப்னு உமர் (றழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகிறார்கள்:*

***"அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தொழுகைக்கு நடந்து செல்வார்கள். மேலும், (வீட்டிற்குத்) திரும்பும்போதும் நடந்தே வருவார்கள்."***[13]

**28.** *பெருநாள் தொழுகைத் திடலுக்கு ஒரு வழியாகச் சென்று, திரும்பும்போது வேறொரு வழியாக வருவது விரும்பத்தக்கது (சுன்னத்தாகும்). ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவ்வாறு செய்துள்ளார்கள். மேலும், (மறுமை நாளில்) அந்த இரண்டு பாதைகளும் அவருக்குச் சாட்சியம் அளிப்பதற்கும், இஸ்லாமிய அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கும், பாவமன்னிப்பு மற்றும் அல்லாஹ்வின் திருப்தியை நோக்கி ஒருவரது நிலை மாறும் என்ற நல்நம்பிக்கைக்காகவும், அந்த இரண்டு வழிகளிலும் உள்ள தனது சகோதரர்களுக்கும் - உறவினர்களுக்கும் ஸலாம் சொல்வதற்காகவும் இவ்வாறு செய்யப்படுகிறது.*

**29.** *பெருநாள் சுன்னத்களில் ஒன்று: பெருநாள் தொழுகையைக் கட்டிடங்களுக்கு வெளியே (மைதானத்தில்) தொழுவதாகும். எனவே, அத்தியாவசியத் தேவை அல்லது நெருக்கடி நிலை ஏற்பட்டால் தவிர, பள்ளவாசல்களில் இத்தொழுகையைத் தொழக் கூடாது. ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திறந்தவெளியில் (மைதானத்தில்) தொழுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். மஸ்ஜிதுல் ஹராமுக்கு அடுத்தபடியாக மிகச்சிறந்த பள்ளிவாயலான*

---

13) *இப்னு மாஜா: 1294, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'ஹஸன்' - தரம் மிக்கது என உறுதிப்படுத்தியுள்ளார்கள்.*

*மஸ்ஜிதுன் நபவியில்கூட அவர்கள் (வழமையாக) இத்தொழுகையைத் தொழுததில்லை.*

*இருப்பினும், திறந்த வெளியில் தொழுவதிலிருந்து மக்கா வாசிகளை மட்டும் மார்க்க அறிஞர்கள் விதிவிலக்காகக் கருதுகின்றனர்; ஏனெனில், அவர்கள் பெருநாள் தொழுகையை மஸ்ஜிதுல் ஹராமிலேயே தொழுவார்கள்."*

**30.** பெருநாள் தொழுகையானது நகரங்களிலும் கிராமங்களிலும் மட்டுமே நிலைநாட்டப்பட வேண்டும். இது பாலைவனப் பகுதிகளிலோ (நாடோடிப் பகுதிகள்) அல்லது பயணத்தின் போதோ தொழுவது மார்க்கத்தில் வழிகாட்டப்படவில்லை. இவ்வாறு தான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து வந்த வழிமுறையாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களோ அல்லது அவர்களது தோழர்களோ (றழியல்லாஹு அன்ஹும்) பயணத்திலோ அல்லது பாலைவனப் பகுதிகளிலோ பெருநாள் தொழுகையைத் தொழுததாக எந்தப் பதிவும் இல்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (ஹஜ்ஜதுல் வதாஃ) 'விடைபெறும் ஹஜ்ஜின்' போது அரபா தினத்தில் இருந்தார்கள். அன்றைய தினம் வெள்ளிக்கிழமையாக இருந்தும் நபியவர்கள் ஜுமுஆத் தொழுகையைத் தொழவில்லை. அதேபோல், மினாவிலும் அவர்கள் பெருநாள் தொழுகையைத் தொழவில்லை.

மேலும், நபியவர்கள் மக்கா வெற்றியின் போது, மக்காவிற்குப் பயணம் செய்து அங்கே ஷவ்வால் மாதம் பிறக்கும் வரை தங்கினார்கள். அப்போது அவர்களுக்குப் பெருநாள் வந்தபோதும், அவர்கள் பெருநாள் தொழுகையைத் தொழுததாக எந்தத் தகவலும் இல்லை.

**31.** *நன்மையிலும், முஸ்லிம்களின் பிரார்த்தனைகளிலும் பங்குகொள்வதற்காக; சிறுவர்களும், பெண்களும், மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்களும் தொழுகை திடலுக்குச் செல்வது அவசியமாகும்.*

عن أمِّ عطيَّة رَضِيَ اللهُ عَنْهَا قالت: «أُمِرْنَا أَنْ نُخْرِجَ الحُيَّضَ يَوْمَ العِيدَيْنِ، والعَوَاتِقَ وَذَوَاتِ الخُدُورِ، فَيَشْهَدْنَ الخَيْرَ وجَمَاعَةَ المسلمينَ وَدَعْوَتَهُمْ، وَيَعْتَزِلُ الحُيَّضُ عَنْ مُصَلَّاهُنَّ»(رواه البخاري - ٣٣٨، ومسلم - ١٤٧٥).

*உம்மு அதிய்யா (றழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*
***"இரு பெருநாட்களிலும் மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்களையும், பருவமடைந்த கன்னிப் பெண்களையும், வீட்டினுள் திரைக்குப் பின்னால் இருக்கும் பெண்களையும் (தொழுகை திடலுக்கு) அழைத்துச் செல்லுமாறு நாங்கள் கட்டளையிடப்பட்டோம். அவர்கள் நன்மைகளிலும், முஸ்லிம்களின் கூட்டத்திலும், அவர்களின் பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ளட்டும். ஆனால் மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள் (மட்டும்) தொழுமிடத்திலிருந்து (தொழுகை நடைபெறும் பகுதியிலிருந்து) ஒதுங்கி இருக்க வேண்டும்."*** [14]

*[**அல்-அவாதிக் (العواتق):** பருவமடைந்த திருமணமாகாத இளம் பெண்கள்.*

***அல்-குதூர் (الخُدور):** வீட்டில் கன்னிப் பெண்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்ட இடம்].*

**32.** ***பெருநாள் தொழுகை என்பது இரண்டு ரக்அத்துக்களாகும். இதில் இமாம் குர்ஆனின் (சில) வசனங்களை சத்தமாக ஓதுவார்.***

***முதல் ரக்அத்தில்:** 'தக்பீரத்துல் இஹ்ராம்' (தொழுகையைத் தொடங்கும் ஆரம்பத் தக்பீர்) கூறிய பிறகு, ஏழு (07) மேலதிக*

---

14) *புஹாரி: 338, முஸ்லிம்: 1475*

*தக்பீர்களைக் கூறுவார். அதன் பின் சூறதுல் பாத்திஹாவையும் மற்றொரு சூறாவையும் ஓதுவார்.*

**இரண்டாவது ரக்அத்தில்:** *(ஸஜ்தாவிலிருந்து) தக்பீர் கூறி நிலைக்கு வந்த பிறகு, ஐந்து (05) மேலதிக தக்பீர்களைக் கூறுவார். அதன் பின் சூறதுல் பாத்திஹாவையும் மற்றொரு சூறாவையும் ஓதுவார்.*

*ஒவ்வொரு* **தக்பீரின் போதும் கைகளை உயர்த்துவது விரும்பத்தக்கதாகும் (முஸ்தஹப்).** [15]

**33.** ***இப்னு மஸ்ஊத் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள், அந்த (மேலதிக) தக்பீர்களுக்கு இடையில் அல்லாஹ்வைப் புகழ்ந்து துதிப்பதையும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பது உறுதியாகியுள்ளது.*** [16]

**34. பெருநாள் தொழுகையில் ஓதுவது**

**كان النبيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقْرَأُ في العيدين بـ** ﴿سَبِّحِ اسْمَ رَبِّكَ الْأَعْلَى﴾، و﴿هَلْ أَتَاكَ حَدِيثُ الْغَاشِيَةِ﴾(رواه مسلم - ٨٧٨).

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்* **இரண்டு பெருநாட்களிலும் «ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா»[17] மற்றும்**

---

15) *ஒவ்வொரு தக்பீரின் போதும் கையை உயர்த்த வேண்டும் என்று கூறக்கூடிய கூற்றுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வழிகாட்டிலில் இல்லை. என்றாலும், ஸஹாபாக்கள் சிலரின் செயற்பாடுகள் இதற்கு ஆதாரமாக சுட்டிக்காட்டப்பட்டாலும் அவைகள் அனைத்தும் பலவீனமான ஆதாரங்களாகும். (மொழிபெயர்ப்பாளனது இணைப்பு)*

16) *ஆதாரம்: தபரானி - அல்-கபீர்: 9/303, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'அல்-இர்வா' (642) நூலில் ஸஹீஹ் என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

17) *அத்தியாயம்: அல்-அஃலா*

**«ஹல் அதாக ஹதீஸுல் காஷியா»**[18] **ஆகிய சூறாக்களை ஓதுபவர்களாக இருந்தார்கள்.** [19]

وثبت عنه أيضًا صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أنَّه قرأ في الأولى بـ ﴿ق وَالْقُرْآنِ الْمَجِيدِ﴾، وفي الثانية بـ ﴿اقْتَرَبَتِ السَّاعَةُ وَانشَقَّ الْقَمَرُ﴾(رواه مسلم - ٨٩١).

*மேலும், அவர்கள் முதல் ரக்அத்தில்* **«காஃப் வல் குர்ஆனில் மஜீத்»**[20] *மற்றும் இரண்டாவது ரக்அத்தில்* **«இக்தரபதிஸ் ஸாஅது வன்ஷக்கல் கமர்»**[21] *ஆகியவற்றை ஓதினார்கள் என்பதும் (மற்றொரு அறிவிப்பில்) உறுதியாகியுள்ளது.* [22]

**35.** *ஒரு மாமூம் (இமாமைப் பின்பற்றித் தொழுபவர்), இமாமை (முதல் தக்பீர் அல்லாத) அந்த மேலதிக தக்பீர்களுக்கு இடையில் அடைந்து கொண்டால், அவர் இமாமுடன் சேர்ந்து தக்பீர் கூற வேண்டும் மற்றும் அவரைப் பின்பற்ற வேண்டும். (அவர் வருவதற்கு முன் இமாம் கூறி முடித்த) விடுபட்ட தக்பீர்களை அவர் மீளச் சொல்ல (கழா செய்ய) வேண்டிய அவசியமில்லை.*

*ஒருவேளை அவருக்கு ஒரு ரக்அத்தே தவறிவிட்டால், அவர் (இமாம் ஸலாம் கொடுத்த பிறகு) அந்த ரக்அத்தை அதன் முறையிலேயே (அதாவது அந்த ரக்அத்திற்குரிய மேலதிக தக்பீர்களைக் கூறியே) தொழுது முடிக்க வேண்டும்.*

**36.** *பெருநாள் தொழுகைக்கு பாங்கோ (அதான்) அல்லது இகாமத்தோ கிடையாது.*

---

18) *அத்தியாயம்: அல்-காஷியா*

19) *முஸ்லிம்: 878*

20) *அத்தியாயம்: காப்*

21) *அத்தியாயம்: அல்-கமர்*

22) *முஸ்லிம்: 891*

قال جابرُ بنُ سَمُرَةَ رَضِيَ اللهُ عَنْهُ: «صَلَّيْتُ مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ العِيدَيْنِ غَيْرَ مَرَّةٍ وَلَا مَرَّتَيْنِ، بِغَيْرِ أَذَانٍ وَلَا إِقَامَةٍ» (رواه مسلم - ٨٨٧).

*ஜாபிர் பின் ஸமுரா (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்:*

***"நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் இரண்டு பெருநாள் தொழுகைகளையும் ஒன்று அல்லது இரண்டு முறைக்கும் மேலாக பாங்கோ இகாமத்தோ இல்லாமலேயே தொழுதிருக்கிறேன்."*** [23]

**37.** *இமாம் முதலில் தொழுகையைத் தொடங்கி, அதன் பின்னரே பிரசங்கத்தை (குத்பா) நிகழ்த்துவார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது உரைகள் (குத்பாக்கள்) அனைத்தையும் அல்லாஹ்வைப் புகழ்வதைக் (அல்ஹம்துலில்லாஹ்) கொண்டே ஆரம்பிப்பார்கள். அவர்கள் இரண்டு பெருநாள் உரைகளையும் தக்பீர் கூறி ஆரம்பித்தார்கள் என்பதை (ஆதாரப்பூர்வமாக) கண்டுகொள்ளமுடியாது.*

**38.** *பெருநாள் உரை (குத்பா) சுன்னத்தாகும். அதில் கலந்து கொள்வதும் அதைச் செவிமடுப்பதும் மார்க்கத்தில் வழிகாட்டப்பட்டுள்ளது. ஏனெனில்,*

أَنَّ النبيّ صَلَّى اللهُ عَلَيْهِ صَلَّى العيد، وقالَ: «مَنْ أَحَبَّ أَنْ يَنْصَرِفَ فَلْيَنْصَرِفْ، وَمَنْ أَحَبَّ أَنْ يُقِيمَ لِلْخُطْبَةِ فَلْيُقِمْ»(رواه النسائي - ١٥٧١)، وصحَّحه الألباني.

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தொழுகையைத் தொழுதுவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:*

***"யார் (பெருநாள் தொழுகை முடிந்ததும்) திரும்பிச் செல்ல விரும்புகிறாரோ அவர் செல்லட்டும். மேலும், யார்***

---

23) *முஸ்லிம்: 887*

***பிரசங்கத்திற்கு தங்கியிருக்க விரும்புகிறாரோ அவர் தங்கியிருக்கட்டும்."***[24]

**39.** *யாருக்கேனும் பெருநாள் தொழுகை தவறிவிட்டால், அவர் அதனை மீண்டும் தொழுவது (கழாச் செய்வது) விரும்பத்தக்கது என்பதே அறிஞர்களின் வலுவான கருத்தாகும். அவர் அத்தொழுகையை அதன் (அடிப்படை) முறைப்படியே தொழ வேண்டும். ஆனால், அதற்குப் பிறகு உரை (குத்பா) நிகழ்த்த வேண்டியதில்லை.*

**40.** *பெருநாள் அன்று ஒருவர் வரும்போது இமாம் குத்பா (உரை) நிகழ்த்திக் கொண்டிருந்தால், அவர் முதலில் அந்த உரையை கவனமாகச் செவிமடுக்கட்டும்; அதன் பிறகு (தவறிப்போன) தொழுகையை தொழுதுகொள்ளட்டும். இதன் மூலம் அவர் (உரையைக் கேட்பது மற்றும் தொழுகையைத் தொழுவது ஆகிய) இரண்டு நன்மைகளையும் ஒன்றுசேர்ந்ததாக பெற்றுக்கொள்வார்.*

**41.** *பெருநாள் தொழுகைக்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ எந்தவித சுன்னத்தான தொழுகைகளும் கிடையாது. ஏனெனில்,*

أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ «خَرَجَ يَوْمَ العِيدِ فَصَلَّى رَكْعَتَيْنِ، لَمْ يُصَلِّ قَبْلَهَا وَلَا بَعْدَهَا» (رواه البخاري - ٩٦٤، ومسلم - ٨٨٤).

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்* ***"பெருநாள் அன்று புறப்பட்டு (தொழுகை திடலுக்கு வந்து) இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள்; அதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ அவர்கள் எதையும் தொழவில்லை."*** [25]

*இருப்பினும், ஒருவேளை பெருநாள் தொழுகை பள்ளிவாயலில் (மஸ்ஜித்) நடைபெற்றால், அங்கே நுழைபவர்*

---

[24]) *நஸயீ: 1571, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'ஸஹீஹ்' என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

[25]) *புஹாரி: 964, முஸ்லிம்: 884*

*(அமரும் முன்) 'தஹிய்யதுல் மஸ்ஜித்' தொழ வேண்டும். (தொழுகை மைதானத்தில் - முஸல்லாவில் - நடைபெற்றால் தஹிய்யதுல் மஸ்ஜித் கிடையாது).*

**42.** வெள்ளிக்கிழமையன்று (ஜுமுஆ) பெருநாள் தினம் வந்தால், பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டவர்களுக்கு அன்று ஜுமுஆத் தொழுகையில் கலந்து கொள்ளாமல் இருக்க அனுமதி (சலுகை) வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில்,

قوله صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «قَدِ اجْتَمَعَ فِي يَوْمِكُمْ هَذَا عِيدَانِ، فَمَنْ شَاءَ أَجْزَأَهُ مِنَ الجُمُعةِ، وَإِنَّا مُجَمِّعُونَ»(رواه أبو داود - ١٠٧٣)، وصحَّحه الألبانيُّ.

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:*

***"உங்களுடைய இந்த நாளில் இரண்டு பெருநாட்கள் ஒன்றாக வந்துள்ளன. எனவே, யார் விரும்புகிறாரோ அவருக்கு இதுவே (பெருநாள் தொழுகையே) ஜுமுஆவிற்குப் போதுமானதாகும். ஆனால் நாமோ ஜுமுஆத் தொழப்போகிறோம்."*** (26)

*ஜுமுஆத் தொழுகையை விட்டுவிடுபவர்கள், அந்த நேரத்தில் தங்களது வீடுகளில் **ழுஹர்** தொழ வேண்டும். இதனைத் தனித்தோ அல்லது குடும்பத்தினருடன் ஜமாஅத்தாகவோ தொழலாம். இருப்பினும், ஜுமுஆத் தொழுகையிலும் கலந்து கொள்வது மிகவும் சிறந்ததாகும்.*

*அன்றைய தினம் (ஜுமுஆ நடக்கும்) பள்ளிகளில் ழுஹர் தொழுகைக்காக ஜமாஅத் நடத்துவதோ, அல்லது ழுஹருக்காகப் பள்ளிகளைத் திறந்து வைப்பதோ அல்லது பாங்கு சொல்வதோ மார்க்கத்தில் வழிகாட்டப்படவில்லை.* (27)

---

26) *அபூ தாவூத்: 1073, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'ஸஹீஹ்' என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

27) *பார்க்க: ஃபதாவா அல்-லஜ்னதுத் தாயிமா: 7/119*

**43.** பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டவர்களுக்கு ஜுமுஆ மற்றும் ழுஹர் ஆகிய இரண்டுமே கிடையாது (அதாவது அன்று நண்பகல் தொழுகையே இல்லை) என்று கூறுவது தவறான கருத்தாகும்; இது நபிவழிக்கு முற்றிலும் முரணானது. இத்தகைய ஆதாரமற்ற கூற்றை மார்க்க அறிஞர்கள் நிராகரித்துள்ளனர்.[28]

**44.** எவர் பெருநாள் தொழுகையைத் தொழவில்லையோ, அவருக்கு ஜுமுஆத் தொழுகையின் கடமை நீங்காது; எனவே அவர் ஜுமுஆத் தொழுவதற்காகப் பள்ளிவாயலுக்குச் செல்வது கடமையாகும். ஒருவேளை (பெருநாள் சலுகையைப் பயன்படுத்திப் பெரும்பாலானோர் வராததால்) ஜுமுஆத் தொழுகை நடத்துவதற்குத் தேவையான குறைந்தபட்ச மக்கள் எண்ணிக்கை அங்கு இல்லையெனில், அவர் அதனை ழுஹராகத் தொழ வேண்டும். [29]

**45.** ஜுமுஆப் பள்ளவாசலின் இமாமைப் பொறுத்தவரை, ஜுமுஆ தொழுகையின் கடமை எவ்விதத்திலும் அவரிடமிருந்து நீங்காது. எனவே, ஜுமுஆவிற்கான குறைந்தபட்ச எண்ணிக்கையிலான மக்கள் கூடினால், அவர் ஜுமுஆ தொழுகையை நடத்துவது கடமையாகும். பெருநாள் தொழுகையைத் தொழாதவர்கள் அல்லது பெருநாள் தொழுத பிறகும் ஜுமுஆவில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தொழுவதற்காக அவர் இதனைச் செய்ய வேண்டும். [30]

**46.** பெருநாளின் ஒழுக்கங்களில் ஒன்று: உறவினர்களையும் நெருங்கிய சொந்தங்களையும் சந்திப்பதன் மூலமும், பரிசுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும், (தொலைப்பேசியின் மூலம்) தொடர்பு கொள்வதன் மூலமும்,

---

28) *பார்க்க: ஃபதாவா அல்-லஜ்னதுத் தாயிமா - 7/120*

29) *பார்க்க: ஃபதாவா அல்-லஜ்னதுத் தாயிமா - 7/119*

30) *பார்க்க: ஃபதாவா அல்-லஜ்னதுத் தாயிமா - 7/119*

அன்பை வெளிப்படுத்துவதன் மூலமும் இரத்த உறவைப் பேணுவதாகும்.

**47.** பெருநாள் என்பது வணக்க வழிபாடுகளுக்குரிய காலமாகும். நற்செயல்கள் மூலம் எல்லாம் வல்ல அல்லாஹ்வை நெருங்குவதற்கும், அவன் வழங்கிய அருட்கொடைகள் முழுமையடைந்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துவதற்குமான சந்தர்ப்பமாகும்.

எனவே, இந்த காலம் தீய செயல்களுக்கும், மார்க்க வரம்பு மீறல்களுக்குமான காலம் அல்ல. பெருநாளைப் பாவங்கள் புரியும் காலமாக மாற்றுவதும்; ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்துவதும் மற்றும் மது அருந்துவதும் முஸ்லிம்களுக்கு எவ்விதத்திலும் தகுதியானது அல்ல.

**48.** மற்ற இரவுகளைத் தவிர்த்து பெருநாள் இரவை மட்டும் வணக்கத்திற்காக (கியாம் அல்லது இரவுத் தொழுகைக்காக) பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுப்பது மார்க்கத்தில் வழிகாட்டப்படவில்லை.

எனினும், ஒருவருக்கு ஏற்கனவே மற்ற இரவுகளில் இரவுத் தொழுகை தொழும் வழக்கம் இருக்குமானால், அவர் பெருநாள் இரவிலும் தொழுவதில் எவ்விதத் தவறுமில்லை.

மேலும், பெருநாள் இரவை வணக்கங்கள் மூலம் உயிர்ப்பிப்பதன் சிறப்பு குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் (அனைத்தும்) ஆதாரப்பூர்வமானவையல்ல.

**49.** தவிர்க்கப்பட வேண்டிய தீய செயல்களில் (முன்கராத்) ஒன்று: பெருநாள் தொழுகை திடலிலோ அல்லது மற்ற இடங்களிலோ ஆண்களும் பெண்களும் கலந்து இருப்பதாகும். இது இரு பாலருக்கும் ஒரு சோதனையாகவும் (ஃபித்னா) தீய விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அமையும்.

எனவே, பெண்கள் தொழுகை திடலை அல்லது பள்ளிவாசலை விட்டு முழுமையாக வெளியேறும் வரை, ஆண்களும் -

*இளைஞர்களும் அங்கிருந்து வெளியேறாமல் (காத்திருப்பது) அவசியமாகும்.*

**50.** *பெருநாள் தினத்தில் பார்வையைத் தாழ்த்திக் கொள்வதிலும், ஹராமானவற்றைக் கேட்பதிலிருந்தும், மனோ இச்சைகளிலிருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்வதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.*

*ஸுஃப்யான் அஸ்-ஸவ்ரி (றஹ்) அவர்களின் தோழர்களில் ஒருவர் கூறுகிறார்: "ஒரு பெருநாள் தினத்தன்று நான் அவர்களுடன் (வெளியே) சென்றேன். அப்போது அவர்கள் கூறினார்கள்: 'இந்த நன்னாளில் நாம் முதலில் ஆரம்பிக்க வேண்டிய மிக முக்கியமான காரியம் பார்வையைத் தாழ்த்திக் கொள்வதாகும்'."*

*ஹஸ்ஸான் இப்னு அபீ ஸினான் (றஹ்) அவர்கள் பெருநாள் தொழுகையை முடித்துத் திரும்பிய போது, அவரது மனைவி அவரிடம் (சோதிப்பதற்காக): "இன்று நீங்கள் எத்தனை அழகான பெண்களைப் பார்த்தீர்கள்?" என்று கேட்டார்.*

*அதற்கு அவர்: "நான் (வீட்டை விட்டு) வெளியே சென்றது முதல் மீண்டும் திரும்பும் வரை எனது பெருவிரலைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை!" என்று பதிலளித்தார். (அதாவது, தனது பார்வையைத் தரையை நோக்கியே வைத்திருந்ததாகக் குறிப்பிடுகிறார்).*

**51.** *பெருநாள் அன்று மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவது விருப்பமான செயலாகும். மார்க்க சட்டங்களுக்கு முரண்படாத வகையில் தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவது அவசியமானதும் விரும்பத்தக்கதுமாகும்.*

عن عائشة رَضِيَ اللهُ عَنْهَا قالت: كانَ يَوْمَ عِيدٍ يَلْعَبُ فِيهِ السُّودانُ بالدَّرَقِ والحِرابِ، فَإِمَّا سَأَلْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَإِمَّا قَالَ: «تَشْتَهِينَ

تَنْظُرِينَ؟»، فَقُلْتُ: نَعَمْ، فَأَقَامَنِي وَراءَهُ، خَدِّي عَلَى خَدِّهِ، وَهُوَ يَقُولُ: «دُونَكُمْ يا بَنِي أَرْفِدَةَ»(رواه البخاري - ٩٥٠، ومسلم -٨٩٢).

*ஆயிஷா (றழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

***"ஒரு பெருநாள் தினத்தன்று அபிசீனியர்கள் (மஸ்ஜிதுந் நபவியில்) கேடயங்கள் மற்றும் ஈட்டிகளைக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னிடம், 'நீ அதைப் பார்க்க விரும்புகிறாயா?' என்று கேட்டார்கள். நான் 'ஆம்' என்றேன். அவர்கள் என்னைத் தங்களுக்குப் பின்னால் நிற்க வைத்தார்கள்; எனது கன்னம் அவர்களது கன்னத்தில் பட்டுக் கொண்டிருந்தது. அப்போது நபியவர்கள் 'பனூ அர்பிதாக்களே! (அபிசீனியர்களே) உங்கள் விளையாட்டைத் தொடருங்கள்' என்று (அவர்களை உற்சாகப்படுத்தி) கூறிக் கொண்டிருந்தார்கள்."*** [31]

**52.** *பெருநாட்களில் பிள்ளைகளுக்கு அனுமதிக்கப்பட்ட விளையாட்டுகள் மற்றும் கேளிக்கைகள் மூலம் மகிழ்ச்சி அளிப்பது மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். அதுமட்டுமின்றி, இது ஒரு வழிபாடாகவும், இறைவனை நெருங்கும் செயலாகவும் கருதப்படும்; ஏனெனில் இது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.*

*இதற்கு ஆதாரமாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கூற்று அமைகின்றது:*

«لِتَعْلَمَ يَهُودُ أَنَّ فِي دِينِنَا فُسْحَةً، إِنِّي أُرْسِلْتُ بِحَنِيفِيَّةٍ سَمْحَةٍ» (رواه الإمام أحمد - ٢٤٨٥٥)، وحسَّنه الألباني في الصحيحة (٤/ ٤٤٣).

*"நிச்சயமாக **நமது மார்க்கத்தில் (இவ்விதமான மகிழ்ச்சிகளுக்கு) ஒரு விசாலமான (இலகுவான) தன்மை உண்டு என்பதை யூதர்கள்***

---

31) *புஹாரி: 950, முஸ்லிம்: 892*

***அறிந்து கொள்ளட்டும். நிச்சயமாக நான் மிகவும் இலகுவான மற்றும் நேரிய மார்க்கத்துடனேயே (ஹனீஃபிய்யத்துன் ஸம்ஹா) அனுப்பப்பட்டுள்ளேன்."*** [32]

**53.** பெருநாள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு சந்தர்ப்பமாகும். எனவே, அதில் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவதும், மார்க்கம் அனுமதித்துள்ள சில பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதும் அவசியமாகும். *உதாரணமாக: பெண்கள் 'தப்பு' (Duff ) அடிப்பது போன்றவை.*

عن عائشة رَضِيَ اللهُ عَنْهَا، أنَّ أبا بكرٍ دَخَلَ عليها وعندَها جاريتان تُغنِّيان وتَضْرِبان، ورسول الله صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مُسَجًّى بثَوْبِه، فانتهرهما أبو بكرٍ، فكشفَ رسولُ الله صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عنه، وقال: «دَعْهُما يا أبا بَكْرٍ؛ فإنَّهَا أَيَّامُ عِيدٍ»(رواه البخاري - ٣٥٢٩، ومسلم - ٨٩٢).

*ஆயிஷா (றழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

***"அபூபக்கர் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் என்னிடம் வந்தார்கள். அப்போது அங்கே இரண்டு சிறுமிகள் (புஆஸ் போர் பற்றிய பாடல்களைப்) பாடிக்கொண்டும், தப்பு (Duff) அடித்துக்கொண்டும் இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது உடலைப் போர்த்தியபடி (அங்கே படுத்திருந்தார்கள்). அபூபக்கர் (றழி) அவர்கள் அந்தச் சிறுமிகளைக் கடிந்து கொண்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது முகத்திலிருந்து ஆடையை விலக்கிவிட்டு, 'அபூபக்கரே! அவர்களை விட்டுவிடும்; நிச்சயமாக இவை பெருநாளின் நாட்கள்' என்று கூறினார்கள்."*** [33]

---

32) *இமாம் அஹ்மத்: 24855, இதனை அல்பானி (றஹ்) அவர்கள் 'அஸ்-ஸஹீஹா' (4/443) நூலில் 'ஹஸன்' - தரம் மிக்கது என உறுதிப்படுத்தியுள்ளார்கள்*

33) *புஹாரி: 3529, முஸ்லிம்: 892*

*இது பின்வருவனவற்றை உணர்த்துகின்றது:*

- *பெருநாள் நாட்களில் பெண்கள் 'தப்பு' (Duff) அடிப்பது அனுமதிக்கப்பட்டது.*
- *மார்க்கத்திற்கு முரணில்லாத நல்ல கருத்துக்கள் கொண்ட கவிதைகள் மற்றும் பாடல்களைப் பாடுவதும் அனுமதிக்கப்பட்டதே.*

*இருப்பினும், மற்ற இசைக்கருவிகள் (Music) மற்றும் வாத்தியக் கருவிகள் - பல்வேறு ஆதாரங்களில் வந்துள்ளபடி - ஹராம் (தடுக்கப்பட்டவை) என்ற நிலையிலேயே உள்ளன. இதில் 'தப்பு' (Duff) மட்டுமே விதிவிலக்காகும்.*

**54.** *அய்யாமுத் தஷ்ரீக் (பெருநாளைத் தொடர்ந்து வரும் மூன்று நாட்கள்) காலத்திலும் பெண்கள் 'தப்பு' (Duff) அடிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. ஆயிஷா (றழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவித்த முன்னைய ஹதீஸில், இந்த நிகழ்வு மினாவில் தங்கியிருந்த நாட்களில் (அதாவது அய்யாமுத் தஷ்ரீக் காலத்தில்) நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அந்த ஹதீஸில் பின்வருமாறு வந்துள்ளது:*

«أنَّ أبا بَكْرٍ رَضِيَ اللهُ عَنْهُ دخل عليها وعندها جاريتان في أيَّام مِنًى تُدَفِّفان وتَضْربان»(رواه البخاري - ٩٨٧، ومسلم - ٨٩٢).

***"நிச்சயமாக அபூபக்கர் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆயிஷா (றழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் வந்தபோது, மினாவில் தங்கியிருந்த அந்த நாட்களில் இரண்டு சிறுமிகள் அங்கே தப்பு (Duff) அடித்துக் கொண்டிருந்தார்கள்."*** (34)

*மினா நாட்கள் என்பவை 'அய்யாமுத் தஷ்ரீக்' (துல்ஹஜ் 11, 12, 13 ஆகிய) நாட்கள் ஆகும்.*

34) *புஹாரி: 987, முஸ்லிம்: 892*

**55.** *பெருநாட்களில் சில ஆபத்தான விளையாட்டுகள் பரவலாகக் காணப்படுகின்றன. அவை வீதிகளிலும் வீடுகளிலும் உள்ள மக்களுக்குப் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. அத்தகைய விளையாட்டுகளில் ஒன்றுதான்: 'பட்டாசுகள்' வெடிப்பதாகும். இவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்; ஏனெனில் இந்தப் பட்டாசுகளினால் பெருமளவு பணம் வீணடிக்கப்படுகிறது, மற்றும் உடல் ரீதியான பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன. மேலும், வீடுகளில் இருக்கும் மக்களுக்கு பெரும் சிரமங்களை (சத்தம் மற்றும் புகையினால்) உண்டாக்குகின்றன.*

*எல்லாம் வல்ல அல்லாஹ் நமது நாட்களை அவனது வழிபாட்டின் (வணக்கத்தின்) மூலம் அழகாக்கவும், அவனது அருட்கொடைகளைக் கொண்டு நமது இல்லங்களையும், உள்ளங்களையும் மகிழ்ச்சியால் நிரப்பவும் வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். மேலும், எங்களிடமிருந்தும் மற்ற முஸ்லிம்களிடமிருந்தும் நற்செயல்களை அவன் ஏற்றுக்கொள்வானாக. ஆமீன்.*

*புகழனைத்தும் அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வுக்கே உரியது.*